◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED24 NEWS
हर खबर, हर शहर

# நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN 24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

⦿ तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता



# தலைஞாயிறு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வட்டார ஆத்மா குழுக்கூட்டம் நடைப்பெற்றது




நாகை மாவட்டம் தலைஞாயிறு வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகள் ஆலோசனை குழு, மாநில விரிவாக்க திட்டங்களின் சீரமைப்பு திட்டம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டத்திற்கு தலைஞாயிறு வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) ரஜினிகாந்த் தலைமை வகுத்தார். வட்டார ஆத்மா குழுத் தலைவர் அப்துல் குத்தூஸ் முன்னிலை வகித்தார்.இதில் 2026-27 ஆம் ஆண்டு முதல் கட்ட மத்திய அரசு மற்றும் மாநில அரசு பங்கீட்டு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் மாவட்டத்திற்கு உள்ளான ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.இக்கூட்டத்தில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு உறுப்பினர்களின் பணிகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுதந்திரா,உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கோகிலா, பிரியா மற்றும் வட்டார ஆலோசனை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

— MAHENDRAN M

LOCAL

## திருப்பூரை சேர்ந்த மது மயக்கத்தில் இருவர் கடற்கரையில் ஆபத்து, கடலோர காவல்படை ரமேஷ்-ஜெயக்குமார் மீட்டனர்



புதுச்சேரி நகரின் புதுவை தலைமைச் செயலகம் அருகே உள்ள கடற்கரையில், திருப்பூரை சேர்ந்த இரண்டு நபர்கள் அதிகமான மது மயக்கத்தில் இருந்த நிலையில், கடலோர காவல்படை மற்றும் லைஃப் கார்டு (L.I.P.) பணியாளர்களின் தடையை மீறி கடலில் இறங்க முயன்றனர். அவர்களின் இந்த நடவடிக்கை ராட்சத அலையில் சிக்கியதனால், கடலில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

அந்த நேரத்தில் கடலோர காவல்படை மற்றும் லைஃப் கார்டு பணியாளர்கள் ரமேஷ், ஜெயக்குமார் ஆகியோர் உடனடியாக பதிலளித்து, இரு நபர்களை பாதுகாப்பாக கடலிலிருந்து இழுத்து மீட்டனர். மீட்பு நடவடிக்கையின் போது, செந்தில் என்ற ஒருவருக்கு கடற்கரையில் உள்ள பாறைகளில் மோதி அதிகமான காயங்கள் ஏற்பட்டது.

மீட்டப்பட்ட பின், காயமடைந்த செந்தில் உட்பட இரு நபர்களும் அருகில் உள்ள பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது.

— Sudhakaran, Puducherry

CRIME

## 13 வயது யோகலட்சுமி 19 நவம்பர் 2026 காலை 06:35 மணிக்கு வீட்டை விட்டு காணாமல்



மங்களம் காவல் நிலையம் 19 நவம்பர் 2026 அன்று காலை 06:35 மணியளவில் 13 வயது யோகலட்சுமி (பிறந்த தேதி 19.11.2026) வீட்டை விட்டு வெளியேறியதை அறிவித்துள்ளது.

யோகலட்சுமி அம்மா கண்டித்ததால் கோபம் கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்றதாக குடும்பம் கூறுகிறது; அதன்பின் அவள் எங்கும் காணப்படவில்லை.

காவல் துறை பொதுமக்களிடம் அவள் பற்றிய எந்தத் தகவலும் கிடைத்தால் உடனடியாக மங்களம் காவல் நிலையம் அல்லது கரிக்கலாம்பாக்கம் புற காவல் நிலையம் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளது.

தொடர்பு எண்கள்: 9042123056, 0413-2665348, 04132666356, 9789441550.

— Sudhakaran

LOCAL

## வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ். லீலா அலெக்ஸ், சமூகநீதி மாணவி விடுதிகளைப் பார்வையிட்டு உணவு தரம், தற்காப்பு பயிற்சி மதிப்பீடு



2026 நவம்பர் 10 அன்று, வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ். லீலா அலெக்ஸ், சமூகநீதி துறையின் கீழ் வேலூர் மாநகராட்சி தோட்டப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள மாணவி விடுதியை பார்வையிட்டார். இந்தப் பயணத்தில் மாவட்ட சமூகநீதி நலத்துறை அலுவலர் திரு.சரவணன், வட்டாட்சியர் திரு.உதயகுமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

ஆட்சித்தலைவர் வழங்கப்பட்ட உணவின் தரத்தை சுவைத்து, அதன் சுத்தம், சத்துமை மற்றும் பாதுகாப்பை மதிப்பீடு செய்தார். உணவின் தரம் திருப்திகரமாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அதே நேரத்தில், மாணவிகளுக்கு தற்காப்பு கலை பயிற்சி வழங்கப்படுவதைப் பார்த்து, இதன் பயன்கள் மற்றும் பயிற்சியாளர்களின் திறமையைப் பற்றி கருத்து தெரிவித்தார்.

பின்னர், வேலூர் மாநகராட்சி கோட்டை சுற்றுச்சாலையில் உள்ள சமூகநீதி பள்ளி மாணவர் விடுதியைச் சோதித்து, மாணவர்களின் கற்றல் திறன், அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி ஆதரவு குறித்து விசாரித்தார். இந்தப் பார்வையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.ராஜராஜன், வட்டாட்சியர் திரு.உதயகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆட்சித்தலைவர், சமூகநீதி துறையின் கீழ் இயங்கும் இந்த விடுதிகள், மாணவிகளின் பாதுகாப்பு, கல்வி மற்றும் உடல் நலனில் முக்கிய பங்கை வகிக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, தொடர்ந்து மேம்பாடு மற்றும் கண்காணிப்பு அவசியம் என்று வலியுறுத்தினார்.

— s.dinesh

## காரைக்குடி மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஓவியப் போட்டி.




காரைக்குடி அழகப்பா கல்லூரி வளாகத்தில் உள்ள CSIR மத்திய

மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் " VIGILANCE AWARENESS WEEK - 2026" ஓவியப்போட்டி நடைபெற்றது. இதில் காரைக்குடி பள்ளியில் படிக்கும் மாணவி அதிஸ்ரீ இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்.

அவருக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட்டது.

— M. Arumugam

RELIGION

## திருப்பரங்குன்றத்தில் தீபத்தூணில் தீபேற்றம் வலியுறுத்தி கூட்டு பிராத்தனை நடைபெற்றது




திருப்பரங்குன்றத்தில் உள்ள ஒரு புனித இடத்தில், தீபத்தூணில் தீபேற்றம் வலியுறுத்தும் நோக்கில் பலர் கலந்து கொண்ட கூட்டு பிராத்தனை நடைபெற்றது. இந்த நிகழ்வு, பக்தர்கள் மற்றும் உள்ளூர் சமூக உறுப்பினர்கள் ஒன்றாக சேர்ந்து, ஒளியின் முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்து, ஆன்மீக ஒற்றுமையை மேம்படுத்தும் முயற்சியாக அமைந்தது.

பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் தயாரித்த தீபங்களை கொண்டு வந்து, ஒன்றாக தீபம் ஏற்றி, பிரார்த்தனை செய்தனர். நிகழ்ச்சியின் போது, தீபத்தின் ஒளி இருளை நீக்கி, ஆன்மீக ஒளியைப் பரப்பும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

இந்தக் கூட்டம், சமூகத்தில் ஒற்றுமை மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை உயர்த்தும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது, மேலும் எதிர்காலத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

— Kumar Periyasamy

POLITICS

## காங்கிரஸ் MP மாணிக்கம் தாகூர் மீது குடியாத்தம் குமரன் இழிவான சமூக ஊடக விமர்சனம், புகார் பதிவு




காங்கிரஸ் கட்சியின் மத்திய மாவட்ட கமிட்டி தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் அவர்களுக்கு எதிராக, திமுக பிரமுகர் குடியாத்தம் குமரன் சமூக ஊடக தளங்களில் இழிவான மற்றும் தரக்குறைவான விமர்சனங்களை வெளியிட்டார். இந்தக் கருத்துக்கள் காங்கிரஸ் கட்சியையும், தாகூர் அவர்களையும் குறிவைத்தவை.

வேலூர் மத்திய மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சுரேஷ்குமார் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர், குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தனர். மனு, குடியாத்தம் குமரனின் இழிவான பதிவுகளை எதிர்த்து, சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறது.

காங்கிரஸ் கட்சியும், மாணிக்கம் தாகூர் அவர்களும், இந்தக் கருத்துக்களை அவதூறு மற்றும் அவமதிப்பாகக் கருதி, அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர். கட்சித் தலைவர்கள், சமூக ஊடகங்களில் பரவியுள்ள இழிவான கருத்துக்களை கடுமையாக கண்டித்துள்ளனர்.

தற்போது, குடியாத்தம் நகர காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது. அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பதிவுகளைப் பரிசோதித்து, தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

— s.dinesh

## பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகனுக்கு காரைக்குடியில் வரவேற்பு.



காரைக்குடி அருகே தேவகோட்டையில் நடைபெறும் கம்பன் விழாவில் கலந்து கொள்ள

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் காரைக்குடி வருகை தந்தபொழுது அவருக்கு காரைக்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், கனிமவளத்துறை அமைச்சருமான டாக்டர் டி. கே. பிரபு அவர்கள் சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

— M. Arumugam

HEALTH

## சென்னை கொளத்தூர் எம்எல்ஏ மருத்துவமனையில் ஒருவர் காலமானார்



சென்னை, தமிழ்நாடு – கொளத்தூர் எம்எல்ஏ மருத்துவமனையில் இன்று ஒரு நபர் மரணமடைந்தார், இது மருத்துவமனையின் அவசர பிரிவில் நிகழ்ந்தது.

மருத்துவமனை, சென்னை நகரின் வடக்கு பகுதியில், கொளத்தூர் பகுதியில் அமைந்துள்ளது; இது பொதுமக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் அரசு மருத்துவமனையாகும்.

மரணத்தின் காரணம் மற்றும் சம்பவத்தின் விவரங்கள் குறித்து மருத்துவமனை அதிகாரிகள் இதுவரை அதிகாரப்பூர்வமாக விளக்கவில்லை; விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

— VASANTHAKUMAR

POLITICS

## கொளத்தூர் எம்.எல்.ஏ வி.எஸ் பாபு உடல்நிலை குறைவு காரணமாக இன்று காலமானார்




தமிழ்நாட்டின் கொளத்தூர் தொகுதிக்கான எம்.எல்.ஏ வி.எஸ் பாபு அவர்கள் இன்று உடல்நிலை குறைவு காரணமாக காலமானார்.

அவரின் குடும்பம் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது, ஆனால் உயிர் காப்பாற்ற முடியவில்லை.

மாநில அரசு மற்றும் பல அரசியல் கட்சிகள் இரங்கல் தெரிவித்துள்ளன.

— Kumar Periyasamy, Chennai

POLITICS

## கொளத்தூர் எம்.எல்.ஏ வி.எஸ் பாபு உடல் நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி காலமானார்



கொளத்தூர் தவெக எம்.எல்.ஏ வி.எஸ்.பாபு, உடல் நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நிலையில், சிகிச்சை பலனின்றி காலமானார்.

அவரின் உடல்நிலை பல நாட்களாகக் குறைந்து வந்தது, மருத்துவர்கள் பல முயற்சிகள் மேற்கொண்டாலும், இறுதியில் உயிரிழந்தார்.

இந்த நிகழ்வு கொளத்தூர் மற்றும் முழு மாநிலத்திலும் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது; பலர் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

முன்னாள் மற்றும் தற்போதைய அரசியல் தலைவர்கள், அவரது பணிக்காலத்தில் செய்த சேவைகளை நினைவு கூறி, அவரது குடும்பத்திற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

— s.dinesh

CRIME

## வெளூர் மாவட்டம் காட்பாடி பள்ளிக்குப்பம் பகுதியில் 1.5 கிலோ கஞ்சா விற்பனைக்கு 33 வயது மணிகண்டன் கைது



வெளூர் மாவட்டம், காட்பாடி அடுத்த பள்ளிக்குப்பம் மலை அடிவாரப் பகுதிகளில் சட்டவிரோதமாகக் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக ரகசியத் தகவல் கிடைத்ததன் பேரில், போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு, அந்தப் பகுதியில் விரிவான தேடலை மேற்கொண்டனர்.

சோதனையின் போது, விற்பனைக்காக 1.5 கிலோ கஞ்சாவை மறைத்து வைத்திருந்த பள்ளிக்குப்பத்தைச் சேர்ந்த "பகிடி" மணிகண்டன் (33) என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரை உடனடியாக உடல் பரிசோதனை செய்து, மறைமுகமாக வைத்திருந்த கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

மணிகண்டன் 2 கொலை வழக்குகள் உட்பட மொத்தம் 14 வழக்குகள் நிலுவையில் உள்ளவராக, கைது செய்யப்பட்டவுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்றம் அவரை சேலம் மத்திய சிறையில் அடைக்க தீர்மானித்தது.

இந்த நடவடிக்கை, உள்ளூர் சமூகத்தில் சட்டவிரோத போதைப் பொருள் விற்பனை மீது கடுமையான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுகிறது, மேலும் எதிர்காலத்தில் இத்தகைய செயல்களைத் தடுப்பதற்கான காவல் துறையின் விழிப்புணர்வை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

— s.dinesh

## காரைக்குடி வ.உ.சி. சாலையில் போக்குவரத்து நெரிசல்



காரைக்குடி வ.உ.சி. சாலையின் ஓரங்களில் போக்குவரத்துக்கு

இடையூறாக பொதுமக்கள் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே

வாகனங்களை ஒழுங்குபடுத்தி, நெரிசலைக் கட்டுப்படுத்த போக்குவரத்துகாவலதுறை உரிய நடவடிக்கை

எடுக்கவேண்டும் என பொதுமக்கள்

எதிர்பார்க்கின்றனர்.

— M. Arumugam

## காரைக்குடி சேது பாஸ்கரா கல்லூரி மாணவர்கள் முன்னேற்பாடு.



காரைக்குடி அருகே உள்ள சேது பாஸ்கரா விவசாய கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண்மை பணி அலுவலக திட்டத்தின் கீழ் பயிலும் மாணவர்கள், அலங்காநல்லூர் அரசு பெண்கள் பள்ளியில் டெங்கு விழிப்புணர்வு பேரணி மற்றும் நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

— M. Arumugam

## காரைக்குடியில் புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டடங்கள் திறப்பு விழா.



காரைக்குடியில் கடந்த

ஆட்சியில் தொடங்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்ட

33வது வார்டு பாரதி நகர் மன்ற

நடுநிலைப் பள்ளியின் இரண்டு புதிய வகுப்பற

பொறுப்பு மேயர் அவர்களும், மாமன்ற உறுப்பி

— M. Arumugam

## கார்த்திகை தீபத் திருவிழா: வேலூர், காட்பாடி பக்தர்களுக்காக சிறப்பு இரயில்கள் அறிவிப்பு!

கார்த்திகை தீபத் திருவிழா மற்றும் பௌர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக தெற்கு இரயில்வே சார்பில் வேலூர், காட்பாடி மற்றும் விழுப்புரம் இடையே சிறப்பு மெமு இரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில் நவம்பர் 22 முதல் 25-ஆம் தேதி வரை இந்த சிறப்பு இரயில்கள் இயக்கப்பட உள்ளன.

காட்பாடி திருவண்ணாமலை இடையே சிறப்பு இரயில்கள்

நவம்பர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் 12 பெட்டிகள் கொண்ட மெமு சிறப்பு இரயில்கள் இயக்கப்படுகின்றன.

காட்பாடியில் இருந்து இரயில் எண் 06146 மதியம் 3.30 மணிக்கும், 06148 இரவு 8.55 மணிக்கும் புறப்பட்டு மாலை 5.30 மணி மற்றும் இரவு 11.05 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும்.

இருந்து இரயில் எண் 06145 மதியம் 12.35 மணிக்கும், 06147 மாலை 6 மணிக்கும் புறப்பட்டு முறையே மாலை 3 மணி மற்றும் இரவு 8 மணிக்கு காட்பாடி வந்தடையும்.

விழுப்புரத்திலிருந்து வேலூர் கன்டோன்மென்ட் இடையே சிறப்பு ரயில் நவம்பர் 22, 23, 24 ஆகிய தேதிகளில் விழுப்புரத்தில் இருந்து இரவு 10.40 மணிக்கு 8 பெட்டிகள் கொண்ட மெமு சிறப்பு இரயில் எண் 06062 புறப்பட்டு, திருவண்ணாமலை வழியாக மறுநாள் அதிகாலை 1.45 மணிக்கு வேலூர் கன்டோன்மென்ட் வரை.

மறுமார்க்கமாக, நவம்பர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் வேலூர் கன்டோன்மென்ட்டில் இருந்து அதிகாலை 2.05 மணிக்கு வண்டி எண் 06061 புறப்படும் இரயில், காலை 5 மணிக்கு விழுப்புரம் சென்றடையும்.

இந்தச் சிறப்பு இரயில்கள் அனைத்தும் முன்பதிவில்லாத மெமு இரயில்களாக இயக்கப்படுகின்றன. பயணிகள் இரயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களிலும், அல்லது அலைபேசியில் Rail One என்ற செயலி மூலமாகவும் டிக்கெட் பெற்றுப் பயணிக்கலாம்.

கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு தெற்கு இரயில்வே அறிவித்துள்ள இந்தச் சிறப்பு இரயில் சேவைகள் வேலூர், காட்பாடி விழுப்புரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பக்தர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

— A RAM PRABHU

## காரைக்குடியில் கார்த்திக் சிதம்பரம் பேச்சு.



காரைக்குடிக்கு நேற்று வருகை தந்த இத் தொகுதி பாரளுமன்ற உறுப்பினர் காரைக்குடி வந்திருந்தார். அப்போது செய்தியாளர்கள் தவெக எம்எல்ஏக்கள் குறித்து கேள்வி கேட்டதற்கு முதல்வர்விஜய் மற்றும் சில அமைச்சர்களை தவிர, தவெக எம்எல்ஏக்களை எனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

— M. Arumugam

## காரைக்குடியிலிருந்து சுவாமி மலைக்கு காவடிகள் புறப்பாடு.



காரைக்குடி நகரத்தார் திருக்கார்த்திகையை முன்னிட்டு, கும்பகோணம் அருகே உள்ள சுவாமி மலைக்கு காவடி எடுத்துச் செல்லும் நிகழ்ச்சி நடந்தது. நேற்று காலை காவடிகளுடன் நகர்வலம் வந்து, காரைக்குடி கொப்புடைய நாயகியம்மன் கோயிலில் காவடிகளை இறக்கி வைத்து வேல் பூஜை செய்யும் நிகழ்ச்சி நடந்தது. மாலையில், காவடிகள் சுவாமிமலைக்கு புறப்பட்டது. வரும் நவ.23ம் தேதி காலை, சுவாமி மலையில் காவடி செலுத்தி வழிபடுவர்.

— M. Arumugam

## குடியாத்தத்தில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது!



வேலூர் மாவட்டம், குடியாத்தம் அடுத்த மேலாளத்தூர் கிராமம், ரயில்வே மேம்பாலம் அருகே குடியாத்தம் நகர காவல் ஆய்வாளர் சிவகுமார், உதவி ஆய்வாளர் ராஜி மற்றும் போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்ட நிலையில் எரவாஞ்சேரி பகுதியில் இயங்கி வரும் தனியார் பள்ளி வாகனத்தில் வந்த முஸ்தக் (25), முகமது இலியாஸ் என்பவரின் மகனை போலீசார் தடுத்து நிறுத்தி விசாரணை மேற்கொண்டனர்.

முஸ்தக் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்ததால் சந்தேகமடைந்த போலீசார், அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். அதில் சுமார் 200 போதை மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, போதை மாத்திரைகளை பறிமுதல் செய்த போலீசார், முஸ்தக்கை கைது செய்து விசாரணை நடத்தினர். பின்னர் அவரை சிறையில் அடைத்தனர்.

போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டதாக இளைஞர் கைது செய்யப்பட்ட சம்பவம் குடியாத்தம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

— ARAM PRABHU

## திருவாரூர் ஆட்சியரக கூட்டரங்கில் தமிழக நூலக ஆணைக்குழு தலைவர் ஜோதிமணி தலைமையில் ஆய்வு கூட்டம்



திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலகக்குழு ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலக நூலக ஆணைக்குழு தலைவர் / காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.லெ.இ.ஜோதிமணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.சதீஸ்குமார், இ.கா.ப., அவர்கள், சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன்காந்தி அவர்கள், சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் மருக.கபில் அவர்கள், திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன்காந்தி அவர்கள், திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.விஜயகுமார் (எ) நவல்பட்டு எஸ்.விஜி தமிழ்நாடு சட்டமன்ற பேரவை சார்புச் செயலாளர் ர.கற்பகம் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பா.கலைவாணி அவர்கள், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலகக்குழு ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலக நூலக ஆணைக்குழு தலைவர் / காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் லெ.இ.ஜோதிமணி தலைமையில் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்வி.சதீஸ்குமார்,, சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் மு.வீ.கருப்பையா , சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் மரு.க.கபில் , திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் (எ) நவல்பட்டு எஸ்.விஜி தமிழ்நாடு சட்டமன்ற பேரவை சார்புச் செயலாளர் ர.கற்பகம் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் பா.கலைவாணி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்

— MAHENDRAN M

EDUCATION

## வேலூரில் காகிதப்பட்டறை பகுதியில் புதிய அரசு பொது நூலகக் கட்டிடம் இறுதிக் கட்டுமானம் முடிவுக்கு நெருங்கியது



வேலூர் #காகிதப்பட்டறை பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் அரசு பொது நூலகக் கட்டடத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ், இ.ஆ.ப. அவர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டேன்.

தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அமைந்துள்ள இக்கட்டடத்தின் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகள், வாசிப்பு அறைகள் மற்றும் வாசகர்களுக்கான அடிப்படை வசதிகளைப் பார்வையிட்டோம்.

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பணிகளைத் தரமாக விரைவில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வலியுறுத்தினோம்.

— s.dinesh

## கீழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்;ஆட்சியர்




நாகப்பட்டினம் மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடம் (தற்காலிக பணியிடம்) காலியாக உள்ளது. கிராம ஊராட்சிகளில் கழிப்பறை வசதி இல்லாத தகுதியான பயனாளிகளுக்கு தனி நபர் இல்லக்கழிப்பறைகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுதல், கிராம ஊராட்சிகளை திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு அடைய செய்திட கிராம ஊராட்சிகளுக்கு சுகாதார தன்னிறைவு திட்டம் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சி அளவிலான சுகாதார பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்குதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்வதற்கு வெளிமுகமை மூலம் (outsourcing) பணியில் ஈடுபடத்திட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (SBM) பதவிக்கு, வெளிமுகமை மூலம் தற்காலிக நியமனத்திற்கு, ஊரக வளர்ச்சித் துறையில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 21 முதல் 40 வயது வரை இருக்கவேண்டும், மாத தொகுப்பூதியமாக ரூ.35,000/- வழங்கப்படும், எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு முறையில் தேர்வு நடைபெறும்

மேலும், கணினியில் முழுமையாகப் பணிபுரியும் திறன். Office Automation Course Certificate பெற்றிருக்க வேண்டும். Valid Driving license உடன் மோட்டார் சைக்கிள் /ஸ்கூட்டர் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். வேறு ஏதேனும் நிறுவனங்களில் பணிபுரிந்து நடத்தை சரியில்லாமல் (Misappropriation) வெளியேற்றப்பட்டவர்களாக இருத்தல் கூடாது.மேலும், புகைப்படத்துடன் கூடிய தன் விவர குறிப்பு (Resume), அடையாள அட்டை நகல், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றை

மேலாளர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட முகமை, நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம் 611001. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை 27.11.2026 என்ற தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

எழுத்து தேர்வு 09.12.2026 அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆய்வுக் கூட்ட அரங்கு, நாகப்பட்டினத்தில் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

— MAHENDRAN M

## எரவாஞ்சேரி காவல்நிலையத்தில் ஆய்வு செய்த கலெக்டர்



தமிழ்நாடு முதலமைச்சரின் "உங்களைத் தேடி உங்கள் ஊரில் "திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத்திற்குட்பட்ட எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் தனசேகர் உள்ளார்.

— MAHENDRAN M

## வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே 200 போதை மாத்திரைகள் கொண்ட இளைஞர் கைது



வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், நகர போலீசார் 200 போதை மாத்திரைகளுடன் 25 வயது முஸ்தக் (முகமது இலியாஸ் மகன்) என்பவரை கைது செய்தனர்.

குடியாத்தம் அடுத்த மேலாளத்தூர் கிராமம், ரயில்வே மேம்பாலம் அருகே குடியாத்தம் நகர காவல் ஆய்வாளர் சிவகுமார், உதவி ஆய்வாளர் ராஜி மற்றும் பல போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்; அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த சந்தேகநபரை நிறுத்தினர்.

முஸ்தக் முன்னால் முரணாக பதிலளித்ததால், போலீசார் அவரது பையை சோதனை செய்து, அதில் சுமார் 200 போதை மாத்திரைகள் இருப்பது கண்டறியப்பட்டது.

போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து, முஸ்தக் மீது விசாரணை நடத்தி, பின்னர் நீதிமன்றத்தில் முன்வைத்து சிறையில் அடைத்தனர்.

— s.dinesh

## திருவாரூர் நகராட்சி தென்றல் நகரில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்படுவதை ஆட்சியர் பார்வையிட்டார்



திருவாரூர் நகராட்சி தென்றல் நகர் ஏழாவது வார்டில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ள வீடுகளை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ.மோகனச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.திருவாரூர் நகரமன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், நகராட்சி ஆணையர் சுரேந்திர ஷா, நகர மன்ற உறுப்பினர் வரதராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.

— MAHENDRAN M

## துளசியாம்பட்டினத்தில் ஒளவையார் மணிமண்டபம் கட்டுவதை பார்வையிட்ட ஆட்சியர்



நாகை மாவட்டம் வேதாரண்யம் வட்டம் துளசியாம்பட்டிணம் கிராமத்தில் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் ஒளவையார் மணிமண்டபம் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். உடன் வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் கண்ணன், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் முல்லை, வட்டாட்சியர் பசுபதி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

— MAHENDRAN M